**<u>In the Court of District Munsif-cum-Judicial Magistrate, Kilpennathur</u>**
**<u>O.S. 11/2024</u>**
**<u>(Old OS 89/2015, PDM TVM)</u>**
**<u>Examination of - DW1</u>**

| | |
|---|---|
| **Name** | : சுகுமாரன் |
| **Father Name** | : **ஆறுமுகம்** |
| **Village** | : |
| **Age** | : 62 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 12.02.2026**

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கில் நான் 7ம் பிரதிவாதி என்றால் சரிதான். 6ம் பிரதிவாதி மாரிமுத்து எனது தாயார் என்றால் சரிதான். 8ம் பிரதிவாதி கோபால் எனது சகோதரர் என்றால் சரிதான். நான் என்ன படித்துள்ளேன் என்றால் 6ம் வகுப்பு படித்துள்ளேன். எழுதப்படிக்க தெரியுமா என்றால் தெரியும். 8ம் பிரதிவாதி கோபால் கிராம நிர்வாக அலுலவலராக பணிபுரிந்தார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண ஆணையுறுதி ஆவணத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் நான் சொல்லிதான் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். கொடியான் என்பவருக்கு வனத்தான் மற்றும் வட்டன் என்பவர்கள் பிள்ளைகள் என்றால் சரிதான். மேற்படி வட்டனுக்கு பூங்காவனம்மாள், பொட்டியம்மாள் மற்றும் தென்னல் என்ற இரண்டு பெண் பிள்ளைகளும் ஒரு ஆணும் ஆவார்கள் என்றால் சரிதான். வனத்தானுக்கு மயில், பூங்கான் மற்றும் கண்ணன் ஆகிய மூன்று ஆண்பிள்ளைகள் என்றால் சரிதான். வழக்கு சொத்தானது ஆதியில் கொடியானுக்கு பாத்தியப்பட்டது என்றால் கொடியான் மற்றும் வட்டன் ஆகிய இருவருக்குமே பாத்தியப்பட்ட சொத்தாகும். மேற்படி அந்த சொத்தை கொடியான் பிள்ளைகளான வனத்தான் மற்றும் வட்டான் ஆகிய இருவருமே அனுபவதித்து வந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி வனத்தான் மற்றும் வட்டன் ஆகிய இருவருமே பாகப்பிரிவினை ஏதும் செய்துகொண்டார்களா என்றால்

இதுவரையில் ஏதும் பாகப்பிரிவினை செய்யவில்லை. 31.12.1971 தேதியிட்ட பி.சா.ஆ.1 கிரையப்பத்திரத்தில் சின்னப்பையன் குமாரர் வீராசாமி என்பவருக்கு கொடியான் மகன் வட்டன் மற்றும் மேற்படி மைனர் மகன் தென்னல் ஆகிய இருவரும் சேர்ந்து வழக்குச் சொத்து மற்றும் இதர சொத்துக்களை கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். நிரூபண ஆணையுறுதி ஆவணத்தில் முதல் பத்தியில் தாவா சொத்துக்களில் 11வது இண சொத்தைப் பொறுத்து மட்டும் எங்களுக்கும் வாதிகளுக்கும் பிரச்சனை உள்ளது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி 11வது அயிட்டத்தின் சர்வே எண். 208/14 என்றால் சரிதான். அதன் மொத்த விஸ்தீரணம் 0.54 செண்ட்டு என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் பி.சா.ஆ.1ல் சொல்லப்பட்டுள்ள மேற்படி 54 செண்ட்டில் 27 செண்ட்டை வட்டன் மற்றும் தென்னலும் சேர்ந்து வீராசாமிக்கு கிரையம் கொடுத்தார்கள் என்றால் சரிதான். மேற்படி 27.08.1997ம் தேதியிட்ட வா.சா.ஆ.3 கிரையத்தின் மூலமாக வீராசாமி என்பவர் ராமசாமி என்பவருக்கு 10 செண்ட்டை கொடுத்தார் என்றால் சரிதான். 08.09.1997ம் தேதியிட்ட வா.சா.ஆ.4 கிரையப்பத்திரத்தின் மூலமாக 10 செண்ட்டை சன்னியாசி என்பவருக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். 15.09.1997ம் தேதியிட்ட வா.சா.அ.5 கிரையப்பத்திரம் மூலமாக வீராசாமி ஏழுமலை என்பவருக்கு 6 செண்ட்டை கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். 13.05.2005ம் தேதியிட்ட அ.சா.ஆ.6 கிரையப்பத்திரத்தின் மூலமாக மீதம் இருந்த 1 செண்ட்டை 6ம் பிரதிவாதியான எனது தாயார் மாரிமுத்துவிற்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். எனவே மேற்படி வீராசாமி சர்வே எண்.208/2014ல் உள்ள 27 செண்ட்டை மேற்படி நபர்களுக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி வீராசாமி சன்னியாசிக்கு கிரையம் கொடுத்த பத்திரத்தில் நான்கு எல்லைகள் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். மேற்படி நான்கு எல்லையில் பூங்கான் நிலத்திற்கு தெற்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வீராசாமி அவர் கிரையம் கொடுத்த 27 செண்ட்டுக்கும சரியான நான்கு எல்லைகளைக் குறிப்பிட்டுத்தான்

கிரையம் கொடுத்துள்ளார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. நான் எனது நிரூபண ஆணையுறுதி ஆவணத்தில் வீராசாமி வட்டனின் சகோதரன் வனத்தானுடன் வழக்குச் சொத்தை கூட்டாக அனுபவித்தார் என்று சொல்லியுள்ளேன் எந்த வருடத்தில் இருந்து மேற்படி கூட்டாக அனுபவித்துவந்தார் என்றால் 1971ம் ஆண்டில் இருந்து அனுபவித்து வந்தார். வீராசாமி வட்டனிடம் இருந்து கிரையம் பெறும் போது எந்தெந்த சர்வே எண்களில் உள்ள எவ்வளவு விஸ்தீரணம் கிரையம் பெற்றார் என்றால் பொதுவில் பாதி என வட்டனிடம் இருந்து கிரையம் பெற்றார். மீதிப்பாதி வனத்தானுக்கு சொந்தமானது என்றால் சரிதான். மேற்படி வீராசாமி கிரையம் பெற்ற சொத்துக்களான பி.சா.ஆ.1ல் மொத்த சர்வே எண்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

(குறுக்கு விசாரணை வாதியின் வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்ட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd/-M.C.Arun
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்